[1987 ஏப்ரல் 25

கதர்த்துறை சார்பில் கிராமங்களை தத்து எடுத்தல்.

502.—(*வினா எண். 9746) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த்துறை சார்பில் கிராமங்களை தத்து எடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன என்ன கிராமங்கள் தத்து எடுக்கப் பட்டு உள்ளன? மாவட்ட வாரியாக.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) விடை** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10.10)

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துணிகள் நகராட்சிப் பகுதிகளில்தான் இப்பொழுது கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளிலும் பேரூராட்சிப் பகுதிகளிலும் சரிவர கிடைப்பதில்லை. அதனால் தள்ளுபடி காலங்களில் கிராமப் பகுதிகளிலே கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் தள்ளுபடி காலங்களில் அந்த அந்த ஒன்றியத்திலே கொண்டு வந்து வைத்து, நம்முடைய கதர் வாரியமே விற்பனை செய்து வருகிறது. அது மட்டுமல்லாமல், நடமாடும் கதர் அங்காடியைக் கூட தற்போது துவங்குவதற்கு ஆய்வு செய்து 3 நடமாடும் கதர் அங்காடிகள் ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் ஈடேறும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் வாரிய கைத்தொழில்கள்.

503—(*வினா எண் 12455) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கதர் வாரியத்தின் மூலம் மேற்கொண்டுள்ள கைத் தொழில் பணிகள் என்னென்ன?

** 865-866ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது